செ.வெ.எண்.79 நாள்.28.04.2017.

திருநெல்வேலி மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் கால்நடைகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற் புழு நீக்க முகாமினை மாவட்ட ஆட்சியர் **முனைவர்.மு.கருணாகரன் இ.ஆ.ப** அவர்கள் பார்வையிடார்.

--------------

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் இன்று (28.04.2017) கால்நடைகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற் புழு நீக்க முகாம் நடைபெற்றது. சேரன்மகாதேவி வட்டம் கரிசல்பட்டியில் நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சியர் **முனைவர்.மு.கருணாகரன் இ.ஆ.ப** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் கால் நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களில் ஏழை எளிய பெண்களுக்கு 2700 கரவை பசுக்களும், 23,032 ஏழை பெண்களுக்கு தலா 4 ஆடுகள் வீதம் 92,128 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. 2017-ம் ஆண்டு மட்டும் 1012 நபர்களுக்கு 4048 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. கரிசல் பட்டி கிராமத்தில் 46 பயனாளிகளுக்கு 184 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. அரசின் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கரவை மாடுகள் மற்றும் ஆடுகளை நோயின்றி கால்நடைத் துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம் முகாம் இரண்டு தினங்கள் மாவட்டம் முழுவதும் நடைபெறும். கால்நடை வளர்ப்போர் இந்த முகாமினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இம்முகாமில் கால்நடை பாராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர்.ராஜேந்திரன் துணை இயக்குநர்கள் டாக்டர்.மாரிமுத்து மற்றும் டாக்டர்.ஆறுமுக பெருமாள், கால்நடை மருத்துவர்கள் டாக்டர்.ஜான்ரவி குமார், தெரசாமேரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.